662

247

உ

கடவுள் துணை.

# வள்ளி சுப்பிரமணியர் தர்க்கம்.

வளையற்சிந்தின் [illegible]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 DEC 1924
MADRAS



எம் எ. ஹாதி விருப்பத்தின்படி

முத்தமிழ் க்ஷேத்திர

எம். இ. எம். பாஸ்கரதாஸரவர்களால்

தொகுக்கப்பெற்றது.

T. [illegible]ஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,
[illegible]பாரம், புதுமண்டபம், மதுரை.
[illegible]924.
[விலை அணா 2
[illegible]லாசம் பிரஸ், மதுரை:—24.

Q26:417
N24
181663

வெளியாகிவிட்டன! உ வெளியாகிவிட்டன!!

# சந்தச்சரப சண்முகதாஸ் அவர்களால்

## இயற்றப்பெற்ற நூதன புத்தகங்கள்.

# பக்தியானந்தக் கேலிப்பதங்கள்

இரண்டாம் பாகம். ... ... விலை 0—6—0

திருமயிலம் பெருநூலாசிரியர் ஸ்ரீலஸ்ரீ தணிகாசலச் சுவாமியவர்கள் திருவாய்மலர்ந்தருளிய முகவுரையுடன் கூடியது.

நேயர்காள்!

பக்தி நெறியறியாப் பாமரரும் இதைவாசிப்பின் இதிலடங்கியுள்ள அகசியக்கீதங்களில் ஈடுபட்டு ஒவ்வொரு கீதத்தையும் இடைவிடாது பாடிப் பாடிக் கடவுளரின் திருவடிக் காளாவார்களெனின் இப்புத்தகத்தைப்பற்றி இன்னமும் விவரித்துரைக்கதேவையோ? எல்லாம் அகசியக்கீதங்கள்! நிந்தாஸ்துதி கீதங்கள்! பாடப் பாடப் பரவசமுறுத்தும், ஓயாச்சிரிப்பைதரும்

# மன்மதன் எரிந்தகட்சிகேள்வி லாவணி

முதற்பாகம் ... ... விலை 0—6—0

இதில் மன்மதன் தேவசபைக்குச் செல்வது முதல் எரிந்து சாம்பலாகும் வரை அவனது சரித்திரமும், இரதி புலம்பலும், எதிர்கட்சியாருடன் வாதாடும் பற்பல கடினமான கேள்விகளும் தற்கால நாகரீக வர்ணமெட்டுகளில் நன்கமைந்திருக்கின்றன ஒரு முறை புத்தகத்தைப் படித்துவிடின் திரும்பவும் பன்முறைகளில் படிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

# பேட்டா போட்டி கள்ளப்பாட்டு

முதற்பாகம் ... ... விலை 0—2—0

இரண்டு கள்ளர்களின் சாமர்த்தியபாடல்களும் தர்க்கங்களும் அதிநேர்த்தியாய் அடங்கியுள்ளன

மஹாத்மா காந்தி தியானம் 1, 2, 3 பாகங்கள் 0—3—0

சிறுத்தொண்டர் (டிராமா) சரித்திரம் 0-4-0

ஸ்ரீராம ஆஞ்சநேய யுத்தம் என்ற
சௌந்தராஜன் டிராமா சரித்திரம் விலை 0—8—0

த. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,
புத்தக வியாபாரம், மதுரை.

உ

கடவுள் துணை.

# வள்ளி சுப்பிரமணியர் தர்க்கம்.

## விநாயகர் துதி.

### காப்பு—வெண்பா.

பொன்பரவு மந்தரமேற் போந்துலவுமாவேல
வன்மருவுமங்கை குறவள்ளி தர்க்கப்—பண்பரவ
வித்தகத்தைமேருமிசை வெண்கோட்டைவைத்தெழுதுங்
கத்தனிருபொற்சரணங் காப்பு.

---

### கலிவிருத்தம்.

வெள்ளியங்கிரிவாழும் விமலனார்
உள்ளமுமகிழுற்றிடவோ முறை
புள்ளிமாமயில் வேலனைப்போற்றுதும்
வள்ளிதர்க்க மகத்வம்விளம்பவே.

181613

---

### ஆனந்தக் களிப்பு.

சீரரும் பரங்குன்றம்வாழும் — கந்தன்
றேவிவள்ளிதர்க்கம் செப்பவென்றாளும்

காரானை மாமுகன்றுணையே — ஆதிக்
கைலையங்கிரிவாழுங் கடவுளர்துணையே

பாராளுமீஸ்வரி துணையே — பொன்னார்
பார்த்தசாரதிய யன்பாதமே துணையே

தாராருஞ்சரஸ்வதி துணையே — ஆஹா
சரவணபவானந்த சண்முகன்றுணையே

மயிலேறி விளையாடு முருகன் — திரு
மாலிலக்குமியக மகிழுறுமுருகன்

அயிலேந்துங்கா மீதிலன்று — வில்லும்
அம்புந்தாங்கி வேடமாய்வனஞ்சென்று

நயவேங்கை மரமாகிநின்று — நம்பி
ராஜன்முன் கிழவனாய் நடித்ததுமுண்டு

மயமேவு வளையலைக்கொண்டு — விற்கும்
வணிகனைப்போலவே வாதுபுகன்று

வள்ளிக் கல்யாணம்புரிந்து
மாதுடன்வள்ளியை மருவிமகிழ்ந்து

புள்ளிமயின் மீதுபாவை இரு
புரமாகவடிபவர்க் கருளினர்சேவை

சரியானபௌரணையை நாடி கந்த
சாமிசங்கீத பரிவாரமுடன்கூடி

வாரிபோல்பெருகி நீரோடி மோது
மாணிக்க கெங்கையிலே வந்துநீராடி

கூரானவடிவேல் சுமந்து எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து

புள்ளிமயில் வேலர்விரைவாக சென்று
பூவையெனுங்குறமாது கோவிலுக்குளேக

வள்ளியம்மை சுவாமிதனைக்கண்டு வாரு
மணவாளரென்றடி பணிந்தன்புகொண்டு

சித்ரமணி மலரணையில்தாவி நல்ல
செங்கமலக்கரத் தாலணைந்திவர்கள்மேவி

கொத்துமுத்து நத்துவளை திருத்தி அன்பாய்
குளிர்ந்தகமகமெனமலர் வாசனைகள்யொருத்தி

இங்கிதமனுள குணநீதா யெனது
இனியசுக போகமதலீலாவினோதா

எங்கள்குலம் விளங்கவந்த நேசா சுவாமி
எனக்கிரங்கி யிதுசமயம்வந்த விசுவாசா

அத்தைபெற்றமுத்தே யெங்கோனே யென்ற
ஆரணங்கையுபசரித்து தேனேயென்மானே

முத்திஸ்ரயிட்டிலங்கு கொங்கையாளே வள்ளி
மோகனமே என்றந்த வேலவர்கையாலே

கலந்தணைந்த சுகந்தமணவாசன் எங்கள்
கட்டழகி வள்ளிதனைப்பார்த்து மதபோஜன்

சலதாரத்தைப் பழித்தகுழலாளே இந்திர
தநுவேவென்றதிசயிக்கும் புருவநுதலாளே

எந்தனுக்கிசைந்த மனையாளே வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக்கு கந்தனுணையாளே

வந்துவெகு நேரமாகுதடி யெந்தன்
மாதுதெய்வானை யெனைத்தேடிடுவாள் காடி

போய்வாரேன் விடைதாடி யென்ன வள்ளி
பூவையவள் கேட்டெந்தன்சாமி நீர்சொன்ன

வாய்ச்சம்பிரதாயமிகு வீச்சு என்ன
...ர்மமிதுவோவறியேன் தர்மமிலாப்பேச்சு

அங்குபோய்ச்செலுத்துமதிகாரம் எந்தன்
அரண்மனையிலிருந்தாலென்னடக்காதோ வீரம்

இங்கிருநாளிருந்து பின்போனல் சுவாமி
என்னகுறைவாகிவிடு மியம்புமுமக்கதனுல்

என்மனையிற்றுமிருக்க அவளேன் உம்மை
எங்கினுந்தேடுவதற்கெதுவிஷயந்தெரியேன்

உண்மைஎனக்கின்னதெனத்தானே என்முன்
உரையுமெனவேலவரும் வள்ளியேகேள்மானே

இங்குகந்துயானிருப்பதாலே என்னை
எங்குசென்றேனேவென்றெண்ணியொருக்காலே

மங்கையருந்தேடிவாளின்று விணில்
வாதுசெய்யாதுவிடையோதிடல் நன்று

கவலையேன்வருவேன்மறுவேளை என்ற
கந்தனையின்றிருந்து செல்லலாம்நாளை

அவசரமுமக்கென்ன ததியே சுவாமி
அரைக்கணமுமுமைப்பிரிய அடியாள்சம்மதியேன்

கூடிவிளையாடிமகிழ்தாரும் மூத்த
குடியாளுக்கஞ்சுவதென் குணமல்லபாரும்

தேடியிங்குவரவேணுந் தெய்வானை எந்தன்
சேதியந்தச்சக்களத்தி தெரியச்செய்வேனே

என்றுமேமொழிந்ததை யுணர்ந்து கந்தன்
ஏதடிவள்ளிசினமித்தனையுகந்த

இன்றகங்காரமிகக்கொண்டாய் தேவ
யேந்திரன் தனக்குநிகரெவர்களுமுண்டோ

சொந்தமாய்க்கிருபைபாராட்டி அந்தத்
தோகையரைப்பருவமதில் யான்மாலைசூட்டி

வந்தபடியாலவளுனக்கு மூந்தி
வந்தவளுமாதலால் யானுமவளுக்கு

அடக்கமாயிருப்பதுசிலாக்யம் வள்ளி
ஆனாலுமில்லறத்துக் கதுதானேயோக்யம்

மடக்கொடிதெய்வானைபவளிங்கே நானும்
வந்தறியாதுமன நொந்திடுவாளங்கே

ஆகையினாலேகவிடைதாடி என
ஆரணங்குகுறமாது நேரினில்வாதாடி

மாகனகமேடையிலிலங்கும்
மனையாட்டி மூத்தகுடியாளெனவிளங்கும்

தெய்வானைசொந்தமிகவாச்சோ நானே
திருட்டுத்தனமாய்வந்த திருடியெல்றேச்சோ

கைமாயஞ்செய்தோமோ அங்கு ஒருவர்
காணுதுமாலையிட்டுவந்திரோ உங்கள்

ஜாதியாரேசிடுவரோகாண் நீரும்
தலைமறைவாயென்மனைக்கு வருவானேனீர்தான்

ஆதியிலெனையே நினைத்து வந்த
தறியாளோ தெய்வானையும்மையுமழைத்து

கூட்டிவந்த நாரதரைக்கேளும் வனத்தின்
குளத்தருகிற்காடிபல கொடும்புலிகள் வாழும்

காட்டிலுமக்குதவி மிகச்செய்தார் உமதண்ணன்
கணபதியைவினவிடிலுஞ்சத்தியமாய்ச்சொல்வார்

மாதவங்கள் செய்சபை முன்னாலே வைத்து
மாது தெய்வானையைமணமுடித்ததாலே

ஓதுமவளுமனு சொந்தக்கிளியோ ஆனால்
உம்முடன்யான் கிழக்குமுகமாயுட்காரவிலையோ

வள்ளியிவ்விதங் கூறத்திகைத்து சென்னல்
வளமேவுகதிர் காமவேலனு நகைத்து

கள்ளிபோல் வீணிலிறையாதே பொல்லாக்
கசடானகுறக்குலத்தை காட்டி மறைக்காதே

பெண்டிரண்டொருவர்க்காகாது என்று
பேசுவதும் புவனமிசைபிழைபடாத்தோது

வண்டார்குலமானே யுனைநாடி வந்த
மணவாளனெனக்கெதிர் வழுத்தலாமோடி

நில்லடியான் போய்வாரேனென்று சொல்ல
நேரினிலுகந்து வள்ளி சிறிபே நின்று

வல்லபமுமக்கென்ன காணும் எனக்கு
வகைசொல்லியப்பாலே நீர் போகவேணும்

என் சமர்த்தை பாருமினி யென்றே வள்ளி
இடைதனிலே சேலையையிருக்கி யெதிர்கொண்டே

அன்போடு நெருங்குவதைக்கண்டார் பெண்ணே
அப்பாலே நில்லுயான் சொல்லுகிறேனென்றார்

சொல்லுகிற சமாச்சாரமென்ன உமது
தொழிலையானெடுநாளுமறிந்து மினியென்ன

நல்லதினிமேற்கொண்டு பார்ப்போம் உமது
நாயமதைத்தேவசபையிலே சொல்லிக்கேட்போம்

தேவசபையிலே சொல்லிப்பாரு அவர்க்கு
தெரியுமடி தினைப்புனத்தினியிருந்த சீரு

ஓவியமேமாவுன்னுறுதி கேட்க யெழுதும்
உடன்படிக்கை முறி யுண்டோ கொண்டுவாடி பார்க்க

உடன்படிக்கைமுறியெழுதித்தருவேன் வள்ளி
உனக்கேவல் செய்வதற்குகந்துன்பின்வருவேன்

கடசகவெனைத்தள்ளாதே மானே என்று
கட்டிமுத்தமிட்டதுங்கசப்பேறுவானே

தனியேவனத்திலிருபேருங் கூடுஞ்
சையோகவேளையில பார்த்தென்னை நீரும்

இனியசெழுந்தேனோ கற்கண்டோ உந்தன்
இதழொன்றியம்பியது மில்லையோவுண்டோ

முன்னிருந்த இனிப்பென்ன போச்சோ இப்போ
மூத்தகுடியாளுமக்குச் சர்க்கரைபோலாச்சோ

என்னைநீர்வசைசொல்வ தேனோ சுவாமி
என்குலத்தை நீரிகழ்ந்து பேசுவதுமேனோ

தந்தையுங்கள் தேட்டையெடுத்தாரோ எங்கள்
ஜாதியார்வந்து தினந்தின்று கொழுத்தாரோ

எந்தனற்குறைக ளேதுமுண்டோ சுவாமி
இழுக்கெந்தஜாதியிலு மில்லாமலுண்டோ

மங்களகல்யாணமதில் நல்லாள் அந்த
மணவறையிலென தகப்பனிட்டபணியல்லால்

உங்களிடம்வந்த நாட்கொண்டு யெனக்கு
உருத்திராக்கவடத்திற்கொரு நவமணியுமுண்டோ

மாதிவையுரைக்க மூத்தய்யன் வள்ளி
மங்கைதனைப் பார்த்தேதுசொல்லுவார்மெய்யன்

ஏதடிநீபேச்சதிகங் கொண்டாய் வள்ளி
என்னுடைய ஜாதியிழிக் கென்னகண்டாய்

குபேரன்மகள்போற் பேசாதே உன்னப்பன்
கொடுத்துவிட்ட வரிசைகளை வெளியேசொல்லாதே

சபையார்களென்ன வறியாரோ இந்தத்
தரணியிலுள்ளவர் களெவருந்தெரியாரோ

உடுத்திவந்த துணிக்கு வேறுண்டோ களிம்பு
ஊற்றுடைய பித்தளையின் ஓலைக்குவேறுண்டோ

கொடுத்திருந்த கருகமணியோடே என்னை
தொடர்ந்துவரும் போழ்துனக்கங்கேதடிபட்டாடை

வண்ணார்கள் வெளுக்காத கலையும் சுத்த
வாணியர்களெண்ணெ யிட்டறியாததலையும்
புண்ணுக்குப்போலழுக்கு மேலும் காட்டில்
புரண்டசெடிமுள்ளிழுத்துச் சுரண்டிவிட்டகாலும்
எப்போதுங்காய் கிழங்கைத்தின்று நீயங்
கிருந்தகெதிதெரியா தென்றெண்ணிணையின்று
அப்பொழுதே யானழைத்துவந்து நல்ல
ஆடையுடனாபரண மழகாயணிந்து
செம்பவள மாளிகைசமைத்து உனக்கு
செங்கமலதாதிகளையே வற்கமைத்து
நம்பியான் செய்ததைமறந்து வள்ளி
நாயகமேயேசுகிறாய் மெத்தவேசிறந்து
மாதேகபேதருதே வாடி யெந்தன்
மனமுழுதுமறியாமற் சொல்லாதேபோடி
கோதையே இதுவென்ன மூர்க்கம் உங்கள்
கூறறிந்து கூறுகிறேன் குறவர்களின் மார்க்கம்
சாரூபங் கட் கஞ்சாக் குடித்து குறவர்
சந்திசிறித்திடக்கூடிசண்டையுமபிடித்து
பூராயந்தெரியாமற் கத்தி கண்ட
பூனைகளை மெளவாரமுயலென்று குத்தி
தின்பதுவு முண்டதிகமாக குறச்
சேரியிலே நீபழகியுகந்தவைபோகம்
செம்பவழவாயாளே யென்று சுவாமி
செப்பிடவுமங்கைவள்ளி சினமதிககொண்டு
விண்ணனமபேசுவதுஞ்சீரோ சுடலை
மீதிலுறுமெலும்புகளைத் தின்பதுவும் யாரோ
கண்ணப்ப னெச்சிலைத்தின்னலையோ சிவனுங்
கரிகாகப் பாலனைக கொன்றதுவுமிலையோ
புத்தியுமக்கில்லாது போமோ செட்ட
புனக்குறவர் பெண்ணெனக்குச் சம்மதிக்கலாமோ
எத்திசையும் புகழ்பெற்ற நாதா என்று
இவள்கூறும் வசையுணர்ந்தியம்புவார் தோதாய்
அடங்தேருவார் குடிமிருந்தால குறவர்
அவர்செலவுக்கே பணமகப்படாதிருந்தால்
கடன் வாங்குவாரகஞ்சம்மதித்து தாலி
..டிய தம்பெண்டுகளை யீடாகவைத்து

கொடுத்துவிட்ட பணத்தினுக் கீடாக — வைத்த
குறத்திகளைப் பணக்கொடுத்த குறவர்வெருவாக

அடுத்தவளை யநுதினமுங் கூடி — இவர்கள்
ஐந்தாறு குழந்தைகளைப்பெற்றபின்பு தேடி

பணங்கொடுத்துத் திரும்புகிறபோது — பெற்ற
பாலகரைத் தன்னுடனே கூட்டியுமம்மாது

குணமுடனே முன்னீடுவைத்த — சொந்தக்
குறவனுடனேகுவதுன்குலந்தனிலெமெத்த

இதுபுதுமை யிவ்வுலகிலுண்டோ — வள்ளி
எங்குமிலாதிக் கொடுமைகளிழிவதும் வேறுண்டோ

கதிகொண்ட மயிலாசனத்தான் — இந்தக்
கதைகூறக் கேட்டவள்ளிக்காரிழை சினத்தால்

குறத்தியென வெனக்குவசைபுரியும் — சுவாமி
கும்பமுனியாலுங்கள் சேதிகொஞ்சந்தெரியும்

மறந்தீரோ நீரறிந்ததில்லையோ — உம்தந்தை
மலைவேடன் மகளைப்போய் மாலையிடவில்லையோ

சிந்தைமகிழ்ந்தொருபெண்ணைத்தூக்கி — உம்தந்தை
சிரமேல்வைத்தே சுமந்து திரிவாகம்நோக்கி

நந்தியீஸ்வரர் சொல்லக்கேட்டேன் — சுவாமி
ஞாயமிலாதோர்விஷயம் நான்சொல்லமாட்டேன்

ஆட்டுக்காலதுதனை யெடுத்தார் — உங்கள்
அப்பனென்றவனி முழுதெங்கும் பழித்தார்

181613

கேட்டுப்பாருமுமதுதாய் அய்யோ — ஒற்றை
மாட்டுக்காரனை வைததிருந்ததென்ன பொய்யோ

கண்ணாயிரங்கொண்டநேர்த்தி — உங்களம்மான்
பெண்ணாசைகொண்டதால் வந்த அபகீர்த்தி

பெண்ணொருவர் கொடுக்காததனால் — உங்கண்ணன்
பெருச்சாளிமீதேறியலைந்துதிரிவதனால்

ஆனைமுகமானதொரு விந்தை — இந்த
அவனிமிசைவழிக்கரையிலமர்ந்திடும்பசுந்தே

பானைவயிறானதொருபேச்சே — நன்றாய்
பார்த்தவர்கள் குலுங்கநகைப்பாரதுவுமேச்சே

அண்ணனொருமத்தளங்கொட்ட — சொந்த
அருமைமருமகனின்று கைத்தாளந்தட்ட

விண்ணவர்கள்கூடியும் நகைக்க — வந்த
வேதியருபாதவரும் கண்டுமேபிர்மிக்க

தேவடியாள்போலுமது அன்னை கூடுந்
தேவசன்பமுனம்நின்று ஆடலையோமுன்னை

பாவலர்கட்கருள் புரியுஞ் சிலா இதனை
பார்த்தவர்கள்சிறிக்காரோ பசும்பொன்வடிவேலா

பத்மாசூரனுக்குமிகப்பயந்து உங்கள்
பரமசிவனோடலையோ காட்டுவழிநுழைந்து

கைப்பொருளுமில்லாமற் தேகி யென்று
கைப்பிச்சைவாங்கலையோ பரம்சிவயோகி

கும்பமுனிக்கருள்புரிந்தோரே என்று
குறவள்ளிகூறுமொழிபாவுமறிந்தாரே

தென்பாவையென்மோகவள்ளி இந்த
ஜெகமெங்குந்திருடிவருங்குறவர்குலக்கள்ளி

குடிகொண்டவனக்குறஜாதி உங்கள்
கூறறிந்துகூறுகிறேன் கேளடியிச்சேதி

சதிர்பெருகுந் திருவிழாக்கடையில் ஜனங்கள்
சந்தடியதாகவே சயனித்திடுமிடையில்

கூசாமல்மெதுவாகப்படுத்து தூக்கம்
குலையாமறபணிதிகளைக்கழற்றியேயெடுத்து

பேசாபலோடுவதுகண்டு குறத்தி
பெரியதனக்காரர்களுமே பிடித்துக்கொண்டு

வம்பிலேதலைமயிரைக்கட்டி குறத்தி
மார்பிலடிப்பாருண்மை வழுத்தென்றுகிட்டி

செம்பணி கொண்டுமே யிருத்தி கட்டுச்
சேலையுரிந்து சினமாக முலையிருத்தி

அடிதண்டமாகவே யடிப்பார் குறவர்
அப்பவுமெடுக்க வில்லை யென்று தடிதுடிப்பார்

தடியடிக்கசையாத ஜாதி குறவர்
சங்கை கெட்டு நிற்பவர்கள் தான் தெரியுஞ் சேதி

என்றிவரியம்பிடவுமாகா சுவாமிக்
கெதிராக நின்றுமொழிவாளவ ளப்போது

தொண்டர் தொழுகின்ற மயிலேறும் சுவாமி
சொல்லுவேனுங்கள் குலவளமைகளைப்பாரும்

அடையாளஞ் சொல்லுகிறேன் கேளும் நல்ல
ஆவினங்கள் கூடியுறுமாயாபாடி வாழும்

இடையருட வளவினிலென்னாளும் உரியில்
இசைந்து வெண்ணை திருடியது மெவரொன்று கேளும்

அன்றுடனே சோதை மாதறிந்து — வந்து
ஆவினத்தைக்கட்டுகிற கயற்றால் வறிந்து
ஒன்றாக மாதரொருபக்கம் — கூடி
உரலோடு கட்டிவைத்துதைத்தாலும் வெட்கம்
கட்டுண்டும் ரோஷமேனிலையோ — பெண்கள்
கட்டும் பல புடவைகளைக் களவாண்டதிலையோ
வெட்டியசமர்க்களத்திலேறும் — கிருஷ்ணன்
விஜயனுடகுதிரைகளை மேய்க்கலையோ பாரும்
ஊத்துகின்ற கஞ்சிகளை யெடுத்தார் — கிருஷ்ணன்
ஊர்க்காலி மாட்டையெல்லாங் கூட்டியங்கே மேய்த்தார்
கூத்ததிகமுண்டுரைப்பேனிரம்ப — சொல்லக்
கூசுகிற தெனது மனங் கொஞ்சமுமியம்ப
கேட்டறிந்த வேலவர் கைநீட்டி — வள்ளி
கேளுரைப்பேனுங்களுடவீடுமலை காட்டில்
நீட்டியிருகால்களை நிறுத்தி — அதனில்
நெட்டுமுட்டாகவளை கூட்டியே பொருத்தி
நத்திய கயற்றினால் வரிச்சு — மழைக்கு
நனையாமல் மூங்கிலிலையால் மேய்ந்த குச்சு
சுற்றிவைத்த சுவரெல்லாமோட்டை — அயர்ந்து
தூங்கவும் விடாதங்கு மூணுமுணுத்த மூட்டை
ஆடேறிமேயுமதில் தொல்லை — வீட்டில்
ஐந்துபேர் தனக்கதிக மிருக்கவிட மில்லை
மூடாத வாசல்களைக்கண்டு — பார்த்து
மூடினாலும் அதிக முகட் டொழுக்கலுண்டு
தேடாத பொருள்ச்சிலவு காணும் — வைத்த
தீபமுந்தெரியாது தோணுமற் தோணும்
கூடாது குற வீட்டை நம்ப — சற்று
குந்திடவுமுடியாது நசுநசுப்பு ரொம்ப
கோடானுகோடியுண்டிசையே — உங்கள்
குலக்கொடுமை கூறுதற்கு கொஞ்சமல்ல வசையே
குறம்பாடிக் கூழ்க்கஞ்சி வாங்கும் — உங்கள்
குறப்பக்கியனைத்துமே கூரையிலே தூங்கும்
வரப்பேதுமில்லை யெனனாளும் — யென்று
வடிவேலரோதிடவே வள்ளிமின்னாளும்
தமக்கென்று சிறுகுடிசைகட்டி — கு
தானிருப்பதிலும் வசைதானுண்டோ கெட்டி

உமக்கொருதலத்தினிலும் நாடி சுவாமி
ஒண்டயிடமில்லாமல் மலைக்கு மலையோடி
கைபிலரைக்காசது மில்லாமல் . வீடு
கட்டியதிற்குடியிருக்க வகையுமறியாமல்
வெய்யலிலும் வேணலிலுங் காய்ந்து சுவாமி
மெத்துவருஷித்தமழை பனியால்நனைந்து
இருப்பதைக்கண்டகம் வாடி உமக்கு
இவ்வுலகிலுள்ளவர்கள் களெல்லவருங்கூடி.
சிறக்கவே ஆலயமமைத்து உமக்கு
செம்பொன்மணியாபரண விருதுகள்சமைத்து
வடிவேலவாகா வென்றெண்ணி இந்த
வரிசையிட்டு வைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி
அடியவர்கள் புண்ணியமிதையா நீரும்
அழகான கோவில்களி லிருக்கிறதும்பொய்யா
தேருடனேகரிபரியு மிரவல் உமக்கு
ஜெயமேளபேரிகையுங் கோவில்களு மிரவல்
ஏறுமயில் வாகனமு மிரவல் உமக்கு
இட்டநவரத்னமணி யாபரணமிரவல்
இத்தனையுமுமக்கிரவல் தானே குறவர்
இருப்பிடத்தை பழிப்பதே னெண்ணுமல் வீணே
வெற்றிவேலது தானே சொந்தம் உமக்கு
வேறுபொருளாஸ்திகளிலேது சம்மந்தம்
மச்சமுனிமறை பொருள்களாலும் உங்கள்
வம்மிஷவகுப்புகளை வழுத்தினர்கேளும்
மச்சானே மறையோதும் வேதன் உமக்கு
வாய்த்திடுந்தாய் மாமனே அளவளந்ததாதன்
ஆத்தாளோ பாணருபரைச்சி அவளுக்
கருமையுறு தமையனையும வளர்த்தவளுமிடைச்சி
தாத்தாவோ மீன்கா"க்கரவன் உமக்கு
தளகர்த்தனவனும் நல்லகுலமறவன்
அரனருமுறைமையுமென்ன பொய்யா சங்க
மாண்டியல்லோ ஜாதியிலே ஜகமறியுமெய்யா
வறன்முறைகளில்லாத நாட்டம் உங்கள்
வம்மிஷந்தெரியாதோ பலஜாதிகூட்டம்
இதற்குமுன் யானறிந்தாலும் உமக்
[illegible]சைவேனே நீர்குட்டிக்கரணம் போட்டாலும்

அதற்கென்ன செய்யலா மய்யா நாங்கள்
ஆறுலுங்குறச்சாதி யென்பதுவும் பொய்யா
பண்டாரம் நானென்று கத்தி எங்தன்
பரணெதிரேவந்தீரே அதுவென்னபுத்தி
கொண்டு குலம் பேசிடவுமாச்சோ சுவாமி
கொய்ததினைமாவுக்கெனக்கெஞ்சினதும் போச்சோ
பேருமறியாமலுருமாறி வந்து
பிசகுசெய்த மதகரியினுலே மதமீறி
பாரமதயானைவராவிட்டால் உமது
பாசாங்குக் குள்ளாகமாட்டேனில்லாவிட்டால்
வளையவிந்தாடி குறவஞ்சி யென்று
வனவேடன் போல வந்து யென்னெதிரே கெஞ்சி
கலையாகுதென வந்து முட்டி நீரும்
காரியங்கள் கொண்டபினே பேசுகிறீர் கெட்டி
வலியநான் வந்தேனோ தொட்டு நீரும்
வஞ்சகமாய்ப்பேசுவதும் வழமையிலாச்செட்டு
சலியாமல் நீருறுதி சொன்ன சொற்கள்
தவறுவரோகலிகாலமானுலுமென்ன
பொன்னடி துலங்கிய பென் மாமி பெற்ற
புண்ணியரே அநுதினமுமகலாமற்சாமி
என்னருகிலிருமென்று கேட்டால் சுவாமி
என்குலத்தை நீர் பழிக்க வுமக்குவிளையாட்டா
வையகத்துக்கேர்க்காது என்னை நீரும்
வஞ்சகமாயிகழ்ந்து பேசுவது தன்னை
தெய்வானையோ சொல்லியுற்ருள் எந்தச்
சிறுக்கிவுமக்கிவ்வளவு சூதுரைத்து விட்டாள்
எப்படியோ யானறியவில்லை உலக
மெங்கும் நீர் போகாதயிட மொன்றுமில்லை
இப்படியு மருந்திட்டதாரு எனக்கு
இயம்பீரோ சொல்லிவைத்த மங்கையர்கள்பேரு
வருந்திவிருந்தளித்தவளைச் சொல்லும் அவளை
மயிர் பிடித்திழுத்துவருவேன் சற்றேநில்லும்
மருந்திடு மயக்கமில்லாவிட்டால் எனக்கு
வழுத்திடவுமாட்டீரோ யானேதுங்கேட்டால்
முருக்கு வளைத்தாதிகளே வாடி
முத்துலிங்கசாமியை நீ கூட்டிவா போடி

கருதுமருந்திடு பிசகுதோணும் — எந்தன்
கணவனென்னுங் கந்தருக்கே கைபார்க்கவேணும்
மின்னாரேயென்றி வளுஞ்சொல்ல — யெங்கள்
வேலரிதுபுதுமையெனக் கேட்டவருமெள்ள
என்னடி வீண்யோசனை நீ கொண்டாய் — நான்
எவளுடைய வீட்டிலிருந்துண்ணதைக் கண்டாய்
என்னுடைய சொல்லுறுதி மீறி — நீயும்
எதிர்பேசினதினாலே யுன்னைபான்சீறி
சொன்னவிதமல்லாது கண்ணே — சும்மா
தோகையேயானுமுனை யேசுவனோ பெண்ணே
மயங்காதே நீ வள்ளிமாதே — உந்தன்
மனமறியயானுரைத்த தறிவாயிப்போதே
ஜெயமாகயான் சென்றுவருவேன் — வள்ளி
தினமுமுனைப்பிரியாமற் றெரிசனமுந்தருவேன்
உந்தனை விட்டகல்வேனோ மானே — யென்று
உபசாரஞ் செய்தங்கு வீற்றிருந்தார்தானே
பந்தமுடனிதைப் படித்தோர் வாழி — எம் பீ யெம்
பாஸ்க்கர தாஸனின் பதமீதும் வாழி

(வள்ளி சுப்பிரமணியர் தர்க்கம் முற்றிற்று.)

---


## மதுரை நகர் சிங்காரக் கலிகால
## வேடிக்கைச்சிந்து 1-ம் பாகம் 0-1-0

இதில், மதுரையின் மகத்துவமும், பெருமையும் மாட மாளிகை, கூடகோபுரங்களின் சிங்காரங்களையும் பற்றி, ரொம்ப அழகாக இனிய வர்ண மெட்டுகளால் வர்ணித்திருக்கிறது. மேலும் கலிகாலத்தால் மதுரை நகர் சீர் பெற்ற விதங்களை யாவரும் தெளிவாக தெரிந்துக்கொள்ளும் பொருட்டு சிந்தாகப் பாடியுமிருக்கிறது. ஒவ்வொருவரும் இதை அவசியம் வாசித்து தெரிந்துகொள்ளவேண்டியவை. புத்தகத்திற்கு முந்துங்கள். சொற்ப காப்பிகளே தயார்.

## புதிய அதிப்பிரசங்கவிகடன் விலை 0-4-0

த கிருஷ்ணசாமி பிள்ளை ஸ்ரீ பிரதர்,

புத்தகவியாபாரம், மதுரை.

வெளியாகிவிட்டது!! வெளியாகிவிட்டது!

புலவர்கள் புகழ்ப்பெற்ற

மு. பொ. தங்கய்யா அவர்களியற்றிய

# நூதன பக்திரஸ கீர்த்தனங்கள்

இரண்டாம் பாகம் விலை 0—5—0

முக்திக்காக சதா துதித்துப்பக்தி புரிவோர்களுக்கும் பாடலிற் சிறந்த நாடக பிரியர்களுக்கும் இன்பம் விளைவிக்கும் தற்கால நாகரீக வர்ணமெட்டுகளிலமைந்த பாடல்களடங்கியது.

---

## கலியுகமகத்துவ காலக்கியானம்:

வீரபோக வசந்தராயர்கதை; இப்பூவுலகில் இனிநடைபெறும் அரிய பெரிய விஷயங்களடங்கியது. (பெரியது) விலை 0—2—0

## புதிய அதிப்பிரசங்க விகடன்

இதுதான் படிக்கப்படிக்க திகட்டாதது; எல்லாம் வெகு தமாஷான விஷயங்கள்; ஓயாச்சிரிப்பைத் தரக்கூடியது. விலை 0—4—0

---

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள கன்னிச்சமீன் சரபம்

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்கள் மாணவர்

R. K. பூமிபாலகதாஸரியற்றியவை

## தேசாபிமானிகளின் திலகரத்தினமாலிகா

இது, படங்களுடன் சிந்தைக்கினிய செந்தமிழ் கமழும் சந்தப் பாடல்கள் நிறைந்தது படிப்பாருள்ளம் பரவசமாகவும், கேட்பாருள்ளம் கிளர்ச்சி மிகுக்கவும் பாடப்பாடத் திகட்டாத தேச பக்தியை தரக்கூடியது. விலை அணா 2.

---

கந்தன் அல்லது கடன்பட்டவன் கதை. விலை 0—3—0
ஆண் பிள்ளை ஏமாற்றம் பெண்மக்களின் மதிமோசம் 0—0—6

எம். இ. எம். **பாஸ்கரதாஸரவர்களியற்றிய**

அற்புத நூதனக்காவடிச்சிந்து. விலை 0—2—0
பக்தியானந்த கீர்த்தனப்பதங்கள் 1, 2, பாகம் 0—12—0
கொள்ளிடம், காவேரி வெள்ளக்கொடுமை சிந்து 0—1—0
மன்மத தகனம் இரதிபுலம்பல் 0—2—0
தேசாபிமானிகள் திலகம் 1, 2, பாகம் 0—8

## த. கிருஷ்ணசாமி பிள்ளை & பி

புத்தக வியாபாரம், புதுமண்டபம்.

முத்தமிழ் க்ஷேத்திர வித்துவரத்தினம்

**A. S. சதாசிவதாஸரவர்கள் எழுதிய**

# பார்ஸி சாவித்திரி சத்தியவான்

முதற்பாகம் ஸ்ரீ 2-ம் பாகம் விலை 0-8-0

இதில், கலிங்கதேசத்தரசன் ராஜதர்பாரில் தேச விசாரணை, சால்வபுரியரசனுடன் போர்புரிந்து நாட்டைக் கைப்பற்றும் சமயம் பாடும் வீராவேச பாடல்களும் வசன சாதுர்யங்களும, சாவித்திரி சத்தியவான் தர்க்கங்களும எமராஜன் தர்பார், சண்டாளர்களுக்கு இடப்படும் தண்டனைகள், ஃடி யார் புலம்பலும் சத்தியவான் உயிர் நீங்கும் சமயம் பாடும் சோகரச பாடல்களும் சாவித்திரி தன் பதிவிரதா சக்தியால் எமராஜனுடன் பின் தொடர்வதும் தர்க்கமும் கணவனின் உயிர்மீட்கும் பாடல்களும் வசனங்களும் படிக்கப் படிக்க உருக்கமாகவும் இன்பமாகவுமிருக்கும். இதில் இடத்திற்குத் தக்கவாறு அமைத்துள்ள புதிய வர்ணமெட்டு பாடல்களின் பெருமையும் வசன சாதுரியங்களினருமையும் படித்த கனவான்கள் இவராலியற்றிய இன்னும் பற்பல பாடல்களையே படித்துணர வாய்ப்படுப்பாரேயன்றி பிறபாடல்களில் இச்சைகொள்ளாரென்பதற்கு இப்புத்தகத்தை வாங்கிப் படிக்கும்பொழுதே உண்மை விளங்கும

ஷியாரியற்றிய இதர புத்தகங்கள்

| | |
|---|---|
| இந்து தேசாபிமானிகள் ஜீவிய செந்தமிழ்திலகம் விலை | 0—8—0 |
| முதற்பாகம் ஸ்ரீ இரண்டாம்பாகம் (பாகம் 1க்கு) விலை | 0—4—0 |
| கலியுக அவதார காந்தி மஹான் திலகரத்திருகரம் | 0—1—0 |
| மதுரை நகர் சிங்காரக்கலிகால வேடிக்கைசிந்து முதற்பாகம் ஸ்ரீ இரண்டாம்பாகம் | 0—2—0 |
| பழனி ஆண்டிப்பண்டாரம் பாட்டு | 0—0—6 |
| சுப்பிரமணியர் பாலாபிஷேகக் காவடிச்சிந்து | 0—0—6 |
| கலிகால பறையன் பாட்டு (நூதனப் பாடல்கள்) | 0—0—6 |
| புருஷன் பெண்டாட்டி தர்க்க வேடிக்கை பாட்டு | 0—0—6 |
| V. K. முத்துசாமி கவிராயர் இயற்றிய சம்பூரண ஸ்ரீ கிருஷ்ண லீலா ஆப்டோன் படங்களுடன்கூடியது | 0—4—0 |
| தெய்வத்திருநாம சத்விஷய கீர்த்தனை | 0—4—0 |

த. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்

புஸ்தகவியாபாரம், மதுரை.